# சிங்கப்பூரைச் சிறப்பானதாக வைத்திருக்க, பல ஆண்டுகளுக்கு முன்னதாகத் திட்டமிட்டுதல் முக்கியம்

***Vasantham Tamil Seithi***, 23 January 2017

சிங்கப்பூரைச் சிறப்பானதாக வைத்திருக்க, பல ஆண்டுகளுக்கு முன்னதாகத் திட்டமிட்டு, நீண்ட காலத்துக்கான முடிவுகளை எடுக்கும் ஆற்றலை அரசாங்கம் பெற்றிருப்பது முக்கியம்.

கொள்கை ஆய்வுக் கழகத்தின் இயக்குநர் திரு. ஜனதாஸ் தேவன் அவ்வாறு கூறியுள்ளார்.

சிங்கப்பூர் தனிச்சிறப்பு வாய்ந்த நாடாக இருக்கவேண்டும் என்றால், அதன் அரசாங்கமும் அவ்வாறு திகழவேண்டும் என்று அவர் சொன்னார்.

அரசாங்கத் தொடர்புப் பிரிவுத் தலைவராகவும் பொறுப்பு வகிக்கும் திரு. ஜனதாஸ் தேவன், இன்று நடைபெற்ற Singapore Perspectives 2017 மாநாட்டில் பேசினார்.

பொருத்தமற்றவர்கள் அரசாங்கத்துக்குள் நுழைந்து, உள்ளூர் அரசியல், மக்களுக்கும் நாட்டுக்கும் ஆபத்தானதாக மாறினால், சிங்கப்பூரை மீட்க முடியாமல் போகலாம் என்று அவர் எச்சரித்தார்.

சிங்கப்பூரர்கள் எல்லாமே தங்களுக்கு இயல்பாகக் கிடைத்துவிடும் என்று எதிர்பார்ப்பதாகக் குறைகூறப்பட்டாலும் அரசாங்கம் எப்போதுமே ஆகச் சிறந்ததாக இருக்கவேண்டும் என்று அவர்கள் எதிர்பார்ப்பது சரிதான் என்றார் திரு. ஜனதாஸ் தேவன்.

நம்முடைய சமூகம் பல்வேறு தரப்பினரைக் கொண்டுள்ளது. அதிலுள்ள சவால்கள் சிக்கலானவை.

மக்களின் கல்வியறிவு தொடர்ந்து அதிகரிக்கும்போது பொதுக் கொள்கை தொடர்பான கருத்துகள் மாறுபடலாம். அது நல்லதுதான்.

நீண்ட காலத்துக்காகத் திட்டமிட்டுச் செயல்படும் நிலையான, தலைசிறந்த அரசாங்கத்தைத் தொடர்ந்து தக்கவைப்பதில்தான் சவால் உள்ளது என்றார் திரு. ஜனதாஸ் தேவன்.